கல்வி மறுசீரமைப்பு மற்றும் பயிற்சிக்கான மாநில கவுன்சில், மகாராஷ்டிரா, பூனே

நிபுன் பாரத் கற்றல் பயிற்சி ஆய்வு

பாடம் - தமிழ் : வகுப்பு - இரண்டு

---

கற்றல் முடிவு எண் : 1 தெரிந்த பாடல்கள் மற்றும் கவிதைகளிலிருந்து ஒத்த ஒலி (ரைமிங்) சொற்களை இனங்கண்டு சொந்த வார்த்தைகளை உருவாக்குதல்.

ஆசிரியர் குறிப்பு:

- ஆசிரியர் சரியான தாளத்துடன் பாடலை / கவிதையை கூற வேண்டும்.
- மாணவர்கள் பாடலை கவனமாக கேட்கும்படி கூறவும். கவனமாக கேட்டபின் அதிலிருந்து சில கேள்விகள் கேட்கப்படும் என்பதையும் கூறவும்.
- ஒவ்வொரு மாணவருக்கும் பாடலை தனித்தனியாக காட்டி பாடலின் அடிப்படையில் பின்வரும் கேள்விகளைக் கேட்கவும்.
- கேள்விகளுக்கு விடையளிக்க 10 வினாடிகள் கொடுக்கவும். 10 நொடிகளில் பதிலளிக்க முடியாவிட்டால் அடுத்த கேள்வியைக் கேட்கவும்.

## வாசிக்கவும் :

பச்சை கிளியே வா! வா!
பாலும் சோறும் உண்ண வா!
கொஞ்சி மஞ்சள் பூச வா!
கொஞ்சி விளையாட வா!
பையப் பைய பறந்து வா!
பாடிப்பாடி களித்து வா!

| கேள்வி | பதில் |
|---|---|
| பாடலின் ஒவ்வொரு வரியும் எந்த ஒலியில் முடிகிறது? | வா வா |
| பாடலில் இருமுறை ஒலிக்கும் வார்த்தைகள் யாவை? | பையப் பைய, பாடிப் பாடி |
| கடைசி எழுத்து ஒரே மாதிரி முடியும் வார்த்தைகள் யாவை? | பறந்து, களித்து |
| கிளியின் நிறம் என்ன? | பச்சை |
| பாலில் இருந்து என்ன பொருள்கள் செய்யலாம்? | காபி, டீ, பால்கோவா, தயிர் |

மதிப்பீட்டிற்கான வரையறைகள்:

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| பாடலைக் கேட்டு 4 முதல் 5 வினாக்களுக்கும் சரியாகவும், முழுமையாகவும் பதில் கூறுதல் | 3 |
| பாடலைக் கேட்டு 2 முதல் 3 வினாக்களுக்கும் சரியாகவும், முழுமையாகவும் பதில் கூறுதல் | 2 |
| பாடலைக் கேட்டு ஒரே ஒரு வினாவுக்கு சரியாகவும், முழுமையாகவும் பதில் கூறுதல் | 1 |
| பாடலைக் கேட்டு வினாக்களுக்கு பதில் சொல்ல தயங்குதல் / எந்த கேள்விக்கும் பதில் கூற இயலவில்லை. | 0 |

கற்றல் முடிவு எண் 2 : கதை மற்றும் பாடலை வாசிக்கும் போது எழுத்துக்கள் மற்றும் அதன் ஒலியை அறிந்து எழுத பழகுதல்.

ஆசிரியர் குறிப்பு:

- ஒவ்வொரு வர்த்தையையும் இரண்டு முறை கூறவும்.
- மாணவர்கள் 10 வினாடிகளுக்குள் விடையளிக்காவிட்டால் அடுத்த வார்த்தையை கூறவும்.

இப்போது நான் சில வார்த்தைகளை கூறுவேன். அதன் மூலம் எழுத்தை கூறவும் என்று கூறவும்.

| வ.எண் | வார்த்தை | முதல் எழுத்து |
|---|---|---|
| 1) | மூக்கு | மு/மூ |
| 2) | இலை | இ/ஈ |
| 3) | மாம்பழம் | ம/மா |

இப்போது நான் சில வார்த்தைகளை கூறுவேன். அதன் கடைசி எழுத்து / ஒலியை கூறவும்.

| வ.எண் | வார்த்தை | கடைசி எழுத்து |
|---|---|---|
| 1) | அம்மா | மா |
| 2) | தொப்பி | பி |
| 3) | வாத்து | து |

மதிப்பீட்டிற்கான வரையறைகள்:

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| கொடுக்கப்பட்ட வார்த்தைகள் 5 முதல் 6 வார்த்தைகளின் கடைசி மற்றும் முதல் எழுத்தை / ஒலியை கண்டறிதல். | 3 |
| கொடுக்கப்பட்ட வார்த்தைகளில் 3 முதல் 4 வார்த்தைகளில் கடைசி மற்றும் முதல் எழுத்தை / ஒலியை கண்டறிதல். | 2 |
| கொடுக்கப்பட்ட வார்த்தைகளில் 2 முதல் 1 வார்த்தையில் கடைசி மற்றும் முதல் எழுத்தை / ஒலியை கண்டறிதல் | 1 |
| எந்த வார்த்தையின் கடைசி மற்றும் முதல் எழுத்தை / ஒலியை கண்டறிய இயலவில்லை. | 0 |

கற்றல் முடிவு எண் : 3 பாடப்புத்தகத்தில் கொடுக்கப்பட்ட பத்தியை பொருள் புரிந்து படித்து விளக்கவும் / கருத்தை கூறவும், சொல்லுதல்.

ஆசிரியர் குறிப்புகள் :

- ஆசிரியர், மாணவர்களுக்கு பத்தியுடன் கூடிய அட்டையை கொடுக்க வேண்டும்.
- பத்தியை கவனமாக படிக்கும் படி மாணவரிடம் கூறவும். பத்தியை படித்து முடித்தபின் அதன் அடிப்படையில் கேள்விகள் கேட்கப்படும் என்பதனையும் கூறவும்.
- ஒரு வார்த்தை படிக்க 5 வினாடிகளுக்கு மேல் எடுத்துக் கொண்டால், அடுத்த வார்த்தையை படிக்கக் கூறவும்.

அடையாளக் குறியீடு:

1. தவறாக படிக்கப்பட்ட அல்லது வாசிக்கப்படாத வார்த்தையை குறிக்க ( / ) என்ற அடையாளம் இடவும்.
2. சரியாக படிக்கப்பட்ட வார்த்தைகளைக் குறிக்க ( ∅) என்ற அடையாளம் இடவும்.

   படிக்க எடுத்துக் கொண்ட நேரம் - .................................. /60

   மாணவர் 60 நொடிகளில் வாசித்த வார்த்தைகள் - ............ /25

வானம் நீல நிறமாக இருந்தது.
குழந்தைகள் பட்டம் விட நினைத்தனர்.
‘வரத் நீ பட்டம் செய்ய உதவுவாயா?’ என்று அனிதா கேட்டாள்.
வரத் பட்டம் செய்ய பொருட்கள் கொண்டு வந்தான்.
அனிதா பட்டம் செய்து முடித்தாள்.

மதிப்பீட்டிற்கான வரையறைகள்:

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| கொடுக்கப்பட்ட நேரத்தில் சரியான உச்சரிப்புடன், வேகத்துடன் நிறுத்தற் குறியீடுகளைப் பயன்படுத்தி 15 முதல்25 வார்த்தைகளை வாசித்தல். | 3 |
| கொடுக்கப்பட்ட நேரத்தில் சரியான உச்சரிப்புடன் வேகத்துடன் தானாக முயன்று 10 முதல் 14 வார்த்தைகள் வாசித்தல். | 2 |
| கொடுக்கப்பட்ட நேரத்தில் 5 முதல் 9 வார்த்தைகளை எழுத்து கூட்டி வாசித்தல். | 1 |
| ஒரு வார்த்தையும் வாசிக்கவில்லை. ஒன்றும் பேசவில்லை. | 0 |

கற்றல் முடிவு எண் : 4 கொடுக்கப்பட்ட படம் மற்றும் சொற்களை தொடர்பு படுத்தி, புரிந்து வாக்கியங்களை உருவாக்குதல்.

ஆசிரியர் குறிப்பு : மாணவர்களுக்கு தகுந்த அறிவுரைகளை வழங்க வேண்டும்.

- படத்தின் இடத்தில் சரியான வார்த்தையை நோட்டில் எழுத கூறவும்.

1)  மூடவும்.

2)  அழகாக உள்ளது.

3)  இருக்கிறது.

மதிப்பீட்டிற்கான வரையறைகள்:

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| மூன்று வாக்கியங்கள் பிழையின்றி எழுதுதல். | 3 |
| இரண்டு வாக்கியங்கள் பிழையின்றி எழுதுதல். | 2 |
| ஒரே ஒரு வாக்கியம் பிழையின்றி எழுதுதல். | 1 |
| பதிலளிக்கவில்லை / கேள்விகள் புரியவில்லை. | 0 |

கற்றல் முடிவு எண் : 5 சுற்றுப்புறத்திலுள்ள விலங்குகள் அல்லது பறவைகள் பற்றி பேசுதல், மற்றும் வீடு, பள்ளியைப் பற்றி தாய்மொழியில் எழுத முயற்சி செய்தல்.

ஆசிரியர் குறிப்புகள்:

- ஆசிரியர் பட அட்டைகளை மாணவர்களிடம் கொடுக்க வேண்டும். கவனமாக கவனிக்க கூற வேண்டும்.
- படத்தில் உள்ள விலங்குகள், பறவைகளை கேட்க வேண்டும்.
- படத்தைப் பார்த்து வாக்கியத்தைப் பொருத்த மாணவர்களுக்கு அதிகபட்சம் 1 நிமிடம் கொடுக்கவும்.
- கேள்விகளுக்கு பேச்சு வழக்கு வார்த்தைகள் ஏற்றுக் கொள்ளப்படலாம்.
- மாணவர்கள் படத்தை மட்டும் அடையாளம் கண்டு அவற்றின் பெயர்களை எழுத முடியவில்லை என்றால் குறிப்பு கொடுக்கவும். ஒவ்வொரு மாணவருக்கும் 20 வினாடிகள் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| தொடர் புள்ள படங்கள் | 5 விலங்குகளின் படங்கள் எடு |  |
| | 5 பறவைகளின் படங்கள் எடு | |

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|
| 5 முதல் 6 விலங்குகள் அல்லது பறவைகள் பெயர் எழுதுதல் | 3 |
| 3 முதல் 4 விலங்குகள் அல்லது பறவைகள் பெயர் எழுதுதல் | 2 |
| 1 முதல் 2 விலங்குகள் அல்லது பறவைகள் பெயர் எழுதுதல் | 1 |
| எந்த பதிலும் எழுதவில்லை / கேள்வி புரியவில்லை | 0 |

❑❑❑